**செய்தி வெளியீடு எண்: 072** **நாள்: 29.01.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (29.1.2018) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் எரிசக்தித் துறை சார்பில் நடைபெற்ற உடன்குடி அனல் மின் திட்டம் நிலை–I அடிக்கல் நாட்டு விழாவில் ஆற்றிய உரை**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, உடன்குடி மிக உய்ய அனல் மின் நிலையம் நிலை–I அடிக்கல் நாட்டு விழா மற்றும் களப்பணி உதவியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்குகின்ற விழா நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி தலைமையுரையாற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்களே, இந்நிகழ்ச்சிக்கு வரவேற்புரையாற்றிய எரிசக்தித் துறையின் முதன்மை செயலாளர் திரு.விக்ரம் கபூர் அவர்களே, மற்றும் வாழ்த்துரை வழங்கிய பெல் நிறுவனத் தலைவர் திரு அதுல் சோப்தி அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, நன்றியுரை ஆற்ற இருக்கின்ற தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.சாய்குமார் அவர்களே, இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே, முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, இங்கே

பணியாணை பெற வந்திருக்கும் பயனாளிகளே மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற மின்சாரத் துறை உயரதிகாரிகளே, அரசு அலுவலர்களே, வருகை தந்துள்ள கழகத்தில் பல்வேறு பொறுப்புகளில் இருக்கின்ற நிர்வாகிகளே, உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே தமிழ்நாடு தொழில் துறையில்
முதன்மையான இடத்தில் உள்ளது.
இதற்குக் காரணம், 2011ஆம் ஆண்டு
பதவியேற்றதில் இருந்து தொழில் துறையில்
அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதில்
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
எடுத்து வந்த பெருமுயற்சியே ஆகும்.

மாநிலத்தில் தொழில் துறை வளர்ச்சிக்கு
மிகவும் முக்கியமானது மின்சாரம் ஆகும்.
தடையற்ற மின்சாரம் இருந்தால் தான்
தொழில்களை சிரமமின்றி நடத்த முடியும்.
தொழில்கள் சிரமமின்றி நடத்த முடியும் என்ற நிலை
இருந்தால் தான்,
தொழிற்சாலைகள் பெருகும்,
வேலைவாய்ப்பு அதிகரிக்கும்,
வெளிநாட்டு முதலீட்டாளர்கள்
தமிழ்நாட்டில் தொழில் தொடங்க ஆர்வம் காட்டுவார்கள்.
அதன் மூலம் தனிநபர் வருமானம் பெருகும்,
நாடும் வளம் பெறும். அந்த வகையில்,

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
பதவியேற்ற போது இருந்த
மின்சார பற்றாக்குறை நிலைமையை
முழுவதுமாக அகற்றி
இருண்டு கிடந்த தமிழ்நாட்டை மிளிரச் செய்து,
மின்மிகை மாநிலமாகவும்
மாற்றிக் காட்டுவேன் என்று சபதம் ஏற்று,
அந்த சபதத்தை நிறைவேற்றும் விதத்தில்
பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தினார்கள்.
அதன் காரணமாக இன்று தமிழ்நாடு
மின்மிகை மாநிலமாகத் திகழ்கிறது என்பதை
பெருமையுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இதனால், தமிழ்நாட்டில் 2010ஆம் ஆண்டு
மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களையும் சேர்த்து
16 ஆயிரத்து 873 மெகாவாட்டாக இருந்த
மாநிலத்தின் மின் நிறுவு திறன், தற்போது
29 ஆயிரத்து 492 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது.
இதில் 2011ஆம் ஆண்டிலிருந்து மட்டும்
10 ஆயிரத்து 673 மெகாவாட் மின்சாரம்,
மாநில மற்றும் மத்திய தொகுப்பு மின் திட்டங்கள்,
மின் கொள்முதல் மற்றும் சூரிய மின்சக்தி மூலம்
தமிழ்நாடு மின்கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.
இதன் காரணமாக தமிழ்நாடு மின் தேவையில்
தன்னிறைவு அடைந்தது மட்டுமல்லாமல்
மின்மிகை மாநிலமாகவும் திகழ்கிறது.

எதிர்வரும் காலங்களில் மாநிலத்தின் எரிசக்தி தேவை

வேகமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
இதனை எதிர்கொள்ளும் வகையில்,
மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி
பல்வேறு மின் திட்டங்களை விரைந்து
செயலாக்கத்திற்கு கொண்டுவர
தொடர்ந்து ஆக்கபூர்வமான முயற்சிகள்
மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
அந்த வகையில்
46 ஆயிரத்து 821 கோடி ரூபாய் மதிப்பீட்டில்
6 ஆயிரத்து 200 மெகாவாட் அளவிற்கு
மின் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.
மேலும் கூடுதலாக,
53 ஆயிரத்து 890 கோடி ரூபாய் மதிப்பீட்டில்
9 ஆயிரத்து 300 மெகாவாட் அளவிற்கான
புதிய மின் திட்டங்கள் நிறுவ
நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த தொலைநோக்கு பார்வையின் அடிப்படையில்,
தற்பொழுது, தலா 660 மெகாவாட் திறன் கொண்ட
இரண்டு அலகுகளை உடைய
உடன்குடி அனல் மின் திட்டம் – நிலை–I–ற்கான
பணி ஆணை பாரத மிகுமின் கழகத்திற்கு
வழங்கப்பட்டுள்ளது.
இத்திட்டம் 2020–2021ஆம் ஆண்டில்
செயல்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், செயலாக்கத்திற்கு வரவிருக்கும்
பல்வேறு மின் திட்டங்களை கருத்தில் கொண்டு

தற்போது உள்ள மின் தொடர் கட்டமைப்பு,

தொடர்ந்து விரிவாக்கப்பட்டு வருகின்றன.

அதன் விளைவாக, 2016–2017–ஆம் நிதியாண்டில்

தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம்

மாநிலத்தில் உயர் அழுத்த மின் பாதை அமைப்பதில்

**இந்தியாவிலேயே முதல் இடத்தையும்,**

துணை மின் நிலையங்களின்

மின்திறனை அதிகப்படுத்துவதில்

**இந்தியாவிலேயே இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது**

என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மாநிலம் முழுவதும்

தடையில்லா மின்சாரம் வழங்குவதை

உறுதி செய்யும் வகையில்

மின் பகிர்மான கட்டமைப்பை வலுப்படுத்த

எடுக்கப்பட்ட முயற்சிகளின் பயனாக,

மாண்புமிகு அம்மா அவர்கள் பதவியேற்ற

2011ஆம் ஆண்டு முதல்

ஏறக்குறைய 59.97 இலட்சம் மின் இணைப்புகள்

பல்வேறு பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ளன.

22 ஆயிரத்து 136 கி.மீ. உயரழுத்த மின் பாதைகள்,

68 ஆயிரத்து 728 கி.மீ.

தாழ்வழுத்த மின் பாதைகள் மற்றும்

87 ஆயிரத்து 187 மின்மாற்றிகள்

இயக்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த உன்னத நிலையை அடைந்ததன் விளைவாக,

தமிழ்நாடு பல்வேறு மின் நுகர்வோர் நலத் திட்டங்களை

செயல்படுத்தி வருகிறது. உதாரணத்திற்கு,
அனைத்து வீட்டு மின் நுகர்வோர்களுக்கும்
100 யூனிட் மின்சாரம் விலையில்லாமல் வழங்குதல்,
அனைத்து கைத்தறி நெசவாளர்களுக்கும்
200 யூனிட்டுகள் இலவச மின்சாரம் வழங்குதல்,
அனைத்து மின் விசை நெசவாளர்களுக்கும்
கட்டண குறைப்பு மற்றும்
750 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்குதல்
போன்ற திட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

இவை தவிர,
மின் இணைப்பை விரைந்து வழங்க
ஒருநாள் மின் இணைப்பு திட்டம் மற்றும்
ஆறு மாத காலத்திற்குள் இலவச விவசாய மின் இணைப்பு
வழங்குவதற்கான தட்கல் முறையில் விரைவுத் திட்டம்,
தொழில் துறை முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்காக
தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு
ஏழு நாட்களுக்குள் மின்சாரம் வழங்கும் திட்டம்,
வணிகம் செய்யும் சூழலை எளிதாக்குவதற்காக
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்துடன்
புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யும் தொழிற்சாலை மற்றும்
தொழில் முனைவோருக்கு தனி மின்பாதை
இலவசமாக அமைத்துத் தரும் திட்டம் ஆகியவை
அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையில் உள்ளன.

அனைத்து திட்டங்களையும் நிறைவேற்றி
மக்களுக்கும், விவசாயிகளுக்கும்,
தொழிற்சாலைகளுக்கும் உடனுக்குடன்

பயன்கள் சென்றடைய மனித சக்தி அவசியமாகும்.
அதை நன்கு உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு,
2011 ஆம் ஆண்டு முதல் பல்வேறு பிரிவுகளில்
சுமார் 7 ஆயிரத்து 619 காலி பணியிடங்களை
நிரப்பியுள்ளது.
அதன் தொடர்ச்சியாக, இன்று
894 கள உதவியாளர் பதவிக்கு
பணி நியமன ஆணை வழங்குவதில்
நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்வாறு காலிப் பணியிடங்களை அவ்வப்போது நிரப்பி,
மின் தேவையினை மக்களுக்கு உடனுக்குடன் வழங்கிட
மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த
துரித நடவடிக்கையின் காரணமாகத் தான்,
2011ஆம் ஆண்டு கடலூர் மாவட்டத்தைத் தாக்கிய
'தானே' புயலின் போதும்,
2016ஆம் ஆண்டு சென்னையைத் தாக்கிய
'வர்தா' புயலின் போதும்,
சமீபத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தைத் தாக்கிய
'ஒகி' புயலின்போதும்,
ஏற்பட்ட இயற்கை பேரிடர்களினால்
சாய்ந்த மின் கம்பங்களை
போர்க்கால அடிப்படையில் சரி செய்து,
மக்களுக்கு உடனடி மின் சேவை வழங்க முடிந்தது
என்பதை பெருமையுடன் நினைவுகூர விரும்புகிறேன்.

இயற்கை பேரிடர்களினால் பாதிக்கப்படும் நேரங்களில்,
மாவட்டம் விட்டு மாவட்டம் சென்று,

இரவு பகல் பாராது உழைத்து
மக்களுக்கு விரைவில் மின் சேவை வழங்க
மிகவும் உறுதுணையாக இருந்த
பொறியாளர்கள் முதல் அனைத்து மின் துறை
ஊழியர்களுக்கும், அவர்களை ஒருங்கிணைத்து
முனைப்பாக களப் பணியாற்றிய
மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத் தீர்வைத் துறை அமைச்சர்
திரு. பி.தங்கமணி அவர்களுக்கும்,
எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர்
திரு. விக்ரம் கபூர் அவர்களுக்கும்,
மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின்
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்
திரு. சாய்குமார் அவர்களுக்கும்,
மற்றும் சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளுக்கும்,
எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும், நன்றிகளையும்
இந்த நேரத்தில் மீண்டும் ஒருமுறை
கூறிக் கொள்வதில் பெருமை அடைகிறேன்.

தற்போது பணி ஆணை பெற வந்திருக்கும்
நீங்கள் அனைவரும், அவர்கள் ஆற்றிய சேவையை
அறிந்து வைத்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.
அதே வழியில் மக்களுக்கு நன்மை செய்யும் விதமாக
கடமையில் கண்ணாகப் பணியாற்றி,
அரசுக்கும் நற்பெயர் பெற்றுத் தருவீர்கள் என்று
மாண்புமிகு அம்மாவின் அரசு
உங்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கிறது.

2011–ஆம் ஆண்டு
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
ஆட்சிப் பொறுப்பேற்பதற்கு முன்பு வரை
தமிழ்நாடு மின் பற்றாக்குறை மாநிலமாக இருந்தது.
ஒரு நாட்டின் தொழில் முன்னேற்றத்திற்கும்,
பொது மக்கள் நலத்திற்கும்
மின்சாரம் உயிர்நாடியாக இருப்பதை உணர்ந்து,
கடுமையான முயற்சியாலும்,
தொலைநோக்கு திட்டங்களாலும்,
தமிழ்நாட்டை மின்மிகை மாநிலமாக உயர்த்தினார்.
இனி எந்தக் காலத்திலும் தமிழ்நாட்டில்
இருளும் இன்னலும் சூழ்ந்துவிடக் கூடாது என்பதில்
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
கண்ணும் கருத்துமாக இருந்தார்கள்.
அதனால் தான் தமிழ்நாடு இன்றைக்கும்
மின்மிகை மாநிலமாக திகழ்ந்து வருகிறது.
மாண்புமிகு அம்மா அவர்களின் கடமை உணர்வோடு
நாங்கள் நல்லோரும், வல்லோரும் போற்றும்
நல்லாட்சி வழங்கி வருகிறோம்.

இந்தத் துறையில் 80,000 பேர் பல்வேறு மட்டங்களில் பணிபுரிந்து வருகின்றார்கள். இவர்களுடைய சேவை மகத்தானது என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். எனக்கு முன்னாலே தமிழ்நாடு மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல புயல் வந்தாலும் சரி, வெள்ளம் வந்தாலும் சரி, வேகமாக,

துரிதமாக பணியாற்றி மக்களுக்கு சேவை செய்யக்கூடிய ஒரு அமைப்பு மின்சாரத் துறை என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். எனவே, 80,000 பேர் சிறப்பான முறையிலே பணியாற்றிய காரணத்தினால் இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக அளவு மின்உற்பத்தி செய்கின்ற மாநிலம் என்ற பெருமையை பெற்றிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன்.

புதிதாக பணி ஆணை பெற வந்திருக்கும்
நீங்களும் கடமை உணர்வோடு மக்கள் பணியாற்றி, அரசுக்கு
நற்பெயரை ஈட்டித் தர வேண்டும் என்று
உங்களைஅன்புடன் கேட்டுக்கொண்டு,

இந்த இனிய விழாவிற்கு வந்திருக்கும் அனைவருக்கும்,
விழாவினை ஏற்பாடு செய்த அனைவருக்கும்
நன்றி கூறி விடை பெறுகிறேன்.
நன்றி, வணக்கம்.

* * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

**நாள்: 29.01.2018**